# சங்கக்கவி நற்றிணையில் குறிஞ்சிப்பாட்டின் 99 மலர்கள்

# 99 Flowers of Kurinchipattu in Sangakkavi Nattrinai

*முனைவர் கி. சங்கர நாராயணன்*
உதவிப் பேராசிரியர் & துறைத்தலைவர் (பொ.)
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**Dr. K. Sankara Narayanan**
*Assistant Professor & Head (i/c)*
*Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியம் தமிழரின் பண்டைய வரலாற்றினையும் வாழ்வியலையும் எடுத்துக்காட்டும் பேரிலக்கியமாகும். இவை அகம், புறம், அகப்புறம் என்று வகைப்படுத்தப் படுகிறது. அகம் காதல் வாழ்வினையும், புறம் போர் வாழ்வினையும் கட்டமைக்கின்றது. பத்துப்பாட்டு இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டினை எழுதியவர் கபிலர். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 மலர்களைப் பட்டியலிடுகிறார். செவ்விலக்கியங்கள் என்றழைக்கப்படும் சங்கக்கவிகளில் இம்மலர்கள் குறித்த பதிவுகள் நிரம்பக் காணக்கிடக்கின்றன. இந்த ஆய்வானது குறிஞ்சிப்பாட்டில் இடம் பெறும் 99 மலர்களின் வருகை முறைகளை நற்றிணையில் இனம் கண்டு தொகுத்துரைப்பதாக அமைகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், நற்றிணை, குறிஞ்சிப்பாட்டு, 99 மலர்கள், கபிலர், ஆம்பல், அனிச்சம், வாகை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.*

## Abstract

*Sangam Literature is an encyclopedia that exemplifies the ancient history and lifestyle of Tamilans. These are classified as internal, external and inter & external. The inner forms (Agam) the life of love and the outer forms (Puram) the life of war. Kapilar is the author of Kurinjipattu, one of the Pathuppattu. Kapilar lists 99 flowers in the index. Sangakkavi, known as Chevvilakyas, are full of records about these flowers. This study summarizes the species and distribution patterns of 99 flowers in Kurinchipattu in Nattrinai.*

***Keywords:*** *Sangam Literature, Nattrinai, Kurinchipattu, 99 Flowers, Kapilar, Aambal, Anichcham, Vaagai, Kurinchi, Mullai, Marutham, Neithal, Paalai.*

**Citation**

Sankara Narayanan, K. "99 Flowers of Kurinchipattu in Sangakkavi Nattrinai." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 7–15.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20096654*

**ஆய்வுக் கட்டுரை**

*மலர்கள் மனித வாழ்வில் தனித்துவ இடத்தைப் பெறுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையில் மலர்கள் இல்லாமல் இந்த உலகில் எதுவும் நிகழ்வதில்லை. சிரிப்பு, அழுகை, சோகம், துன்பம், இன்பம் போன்ற வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகளோடு மலர்கள் இன்றியமையாதவையாகின்றன. ஒருவரின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுப்பதற்கு மலர்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. பழந்தமிழர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அகம், புறம் என்ற ஒழுக்கம் சார்ந்த கோட்பாடுகளிலும் மலர்களின் பங்கு மிகவும் அவசியமானதாகிறது. புறத்தில் போரின் அடையாளச் சின்னமாகவும் மண்சார்ந்த அடையாளமாகவும் வெற்றியின் அடையாளமாகவும் மலரினைக் குறியீடு செய்கின்றனர். அகத்திலும் கையுறை அளித்தல், மலர்களால் அலங்கரித்தல், மலர்களைக் கொண்டு விளையாடுதல், புனல் விளையாட்டு எனப் பல நிலைகளில் மலர் அடையாளச் சின்னமாகப் பார்க்கப்படுகிறது. இம்மலர்களை எல்லாம் தொகுத்து வழங்கும் விதமாகக் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 மலர்களை வரிசைப்படுத்துகிறார். சங்க இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் கூறப்பெற்ற இந்த 99 மலர்களை சங்க இலக்கியங்களிலே பொருத்திப்பார்ப்பது, தொல்காப்பியர் மொழிந்த 32 வகையான உத்திகளில் ஒன்றாகும். அவ்வகையில் இந்த 99 மலர்களின் வருகை முறைகளை நற்றிணையில் பொருத்திப் பார்த்து அதன் வருகை முறைகளை இனம் கண்டு எடுத்துரைக்கும் விதமாக இந்த ஆய்வு அமைகிறது.*

*குறிஞ்சிப்பாட்டில் கபிலர் மொழிந்த 99 மலர்களின் பெயர்கள் வருமாறு; 1.காந்தள் 2. ஆம்பல் 3.அனிச்சம் 4.குவளை 5. குறிஞ்சி 6. வெட்சி 7. செங்கொடுவேரி 8.தேமா(தேமாம்பூ) 9. மணிச்சிகை 10.உந்தூழ் 11.கூவிளம் 12. எறுழ் (எறுழம்பூ) 13.சுள்ளி 14. கூவிரம் 15. வடவனம் 16. வாகை 17. குடசம்18. எருவை 19. செருவிளை 20.கருவிளம் 21. பயினி 22. வானி 23. குரவம் 24. பசும்பிடி 25. வகுளம் 26. காயா 27. ஆவிரை 28.வேரல் 29.சூரல் 30.சிறுபூளை 31.குறுநறுங்கண்ணி 32.குருகிலை 33.மருதம் 34.கோங்கம் 35. போங்கம் 36. திலகம் 37. பாதிரி 38. செருந்தி 39. அதிரல் 40. சண்பகம் 41. கரந்தை 42. குளவி 43. மாமரம் (மாம்பூ) 44. தில்லை 45. பாலை 46. முல்லை 47. கஞ்சங்குல்லை 48. பிடவம் 49. செங்கருங்காலி 50. வாழை 51. வள்ளி 52. நெய்தல் 53. தாழை54. தளவம்55. தாமரை 56. ஞாழல் 57. மௌவல் 58. கொகுடி 59. சேடல் 60. செம்மல் 61. சிறுசெங்குரலி 62. கோடல் 63. கைதை 64. வழை 65. காஞ்சி 66. கருங்குவளை (மணிக் குலை) 67. பாங்கர் 68. மரவம் 69. தணக்கம் 70. ஈங்கை 71. இலவம் 72. கொன்றை 73. அடும்பு 74. ஆத்தி 75. அவரை 76. பகன்றை 77.பலாசம் 78.பிண்டி 79.வஞ்சி 80.பித்திகம் 81. சிந்துவாரம் 82. தும்பை 83. துழாய் 84.தோன்றி 85.நந்தி 86.நறவம் 87.புன்னாகம் 88.பாரம் 89.பீரம் 90.குருக்கத்தி 91.ஆரம் 92. காழ்வை 93. புன்னை 94.நரந்தம் 95.நாகப்பூ 96.நள்ளிருணாறி 97.குருந்தம் 98.வேங்கை 99.புழகு. இனி நற்றிணையில் காணலாகும் மலர்களைக் காணலாம்.*

**ஆம்பல் – குவளை – கள்ளி**

***நீர் வளர் ஆம்பல் தூம்பு உடை திரள் கால் (நற் 6:1)***
***குவளை அன்ன ஏந்து எழில் மழை கண் (நற்.6:3)***
***பரல் தலைபோகிய சிரல் தலை கள்ளி (நற்.169:4)***

*பரல்கற்கள் நீண்டு கிடக்கின்ற பாலை நிலத்தில், மீன்கொத்திப் பறவையின் தலையைப் போன்ற கள்ளிச் செடியானது காணப்படுகின்றது என நற்றிணை விளக்கம் தருகின்றது.*

***களரி ஓங்கிய கவை முள் கள்ளி (நற்.384:2)***
***நொடிவிடுவு அன்ன காய் விடு கள்ளி (நற்.314:9)***

*களர் நிலத்தில் உயரமாய் வளர்ந்த கவைத்த முள்ளைக் கொண்ட கள்ளி என்றும் விரல்களை நொடித்துவிட்டாற்போன்று காய்கள் வெடிக்கும் கள்ளி என்றும் இங்கு பொருள் கொள்ளப்படுகிறது.*

***கருவிளை – குரவம்***

***மணி கண்டு அன்ன மா நிற கருவிளை***
***ஒண் பூ தோன்றியொடு தண் புதல் அணிய (நற்.221:1-2)***
***தண் புன கருவிளை கண் போல் மா மலர் (நற்.262:1)***

*நீலமணியைக் கண்டாற்போன்ற கரிய நிறமுள்ள கருவிளை மலர், ஒள்ளிய பூவாகிய செங்காந்தளோடு குளிர்ச்சியுள்ள புதர்களை அழகுசெய்யும் எனவும் குளிர்ச்சியான கொல்லையில் வளர்ந்த கருவிளம்பூவின், கண் போல மலர்ந்த, பெரிய பூ எனவும் நற்றிணை கருவிளைக்கு விளக்கம் தருகின்றது.*

***பின்பனி அமையம் வரும் என முன்பனி***
***கொழுந்து முந்துறீஇ குரவு அரும்பினவே (நற்.224:2,3)***
***குறு நிலை குரவின் சிறு நனை நறு வீ (நற்.56:1)***
***குறும் கால் குரவின் குவி இணர் வான் பூ (நற்.266:2)***

*பின்பனிக் காலம் வரப்போகிறது என்று முன்பனிக்காலத்தில் தளிர்களை முதலில் விட்டு, குராமரங்கள் அரும்புவிடுகின்றன என்றும் குட்டையாக நிற்கும் குரா மரத்தின் சிறிய அரும்புகளைக் கொண்ட நறிய மலர்கள் என்றும் பொருள் விளக்கம் இதற்குக் கொள்ளப்படுகின்றது.*

***மருதம் – கோங்கம்***

***வாங்கு சினை மருத தூங்கு துணர் உதிரும்***
***தேர் வண் விராஅன் இருப்பை (நற்.350:3-4)***

*வெண்ணெல் கதிர்களை அறுப்பவர்களின் தண்ணுமைப் பறையின் ஒலிக்கு வெருண்டு பழனத்தில் உள்ள பலவான பறவைகள் பறந்தோட, வயல்வெளியில் வளைந்த கிளைகளைக் கொண்ட மருதமரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் பூங்கொத்துக்கள் உதிர்கின்ற தேர்க்கொடை கொடுப்பதில் சிறந்த வீரன் என்பானின் இருப்பையூர் என்கிறது.*

***பல் பூ கோங்கம் அணிந்த காடே (நற்.202:11)***

*காட்டில் மலர்ந்திருக்கும் பூ கோங்கம் என்று நற்றிணை விளக்கம் தருகின்றது.*

*பாதிரி*

*பாதிரி மலரினை சிவப்பு, வெள்ளை, பொன்நிறம் என்ற வகைகளில் வகைப்படுத்துவர்.*

***மா கொடி அதிரல் பூவொடு பாதிரி***
***தூ தகட்டு எதிர் மலர் வேய்ந்த கூந்தல் (நற்.52:1-2)***

*கரிய கொடியையுடைய காட்டுமல்லிகைப்பூவுடனே பாதிரியின் தூய பொன் தகடு போன்ற மலரையும் சேர எதிரெதிர் வைத்துத்தொடுத்துக்கட்டிய மலர்மாலையைச் சூடிய கூந்தலினை உடையவள் என்கிறது. இங்கு பொன்னிறமானது என்ற பொருளில் பாதிரி மலர் எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

***துகிலிகை அன்ன துய் தலை பாதிரி***
***வால் இதழ் அலரி (நற்.118:8-9)***

*வண்ணக்கோலின் தலையைப் போன்ற பஞ்சினைத் தலையில் கொண்ட பாதிரியின் வெண்மையான இதழ்களையுடைய மலர்கள் என்பதிலிருந்து இங்கு வெண்மை நிறம் என்ற பொருளில் பாதிரி மலர் எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

***பராரை பாதிரி குறு மயிர் மா மலர் (நற்.337:4)***

*பருத்த அடிமரத்தைக் கொண்ட பாதிரியின் நுண்ணிய மயிர்களைக் கொண்ட சிறந்த மலர் என்பதிலிருந்து பாதிரி மலர் இங்கு சிவப்பு நிறமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

***அதிரல் – குளவி – தில்லை***

*அதிரல் என்ற மலரைக் காட்டு மல்லி என்றும் குளவி என்ற மலரை மலை மல்லி என்றும் அழைப்பர்.*

***முதிரா வேனில் எதிரிய அதிரல் - (நற்.337:3)***
***பெரும் தண் கொல்லி சிறு பசும் குளவி***
***கடி பதம் கமழும் கூந்தல் (நற்.346:9-10)***
***குருளை நீர்நாய் கொழு மீன் மாந்தி***
***தில்லை அம் பொதும்பில் பள்ளிகொள்ளும் (நற்.195:2-3)***

*குட்டியான நீர்நாய் கொழுமையான மீன்களை நிறைய நன்கு உண்டு தில்லை மரப் பொந்தினில் படுத்துறங்கும் என்று நற்றிணை கூறுகின்றது.*

***பாலை – குல்லை – பிடவம்***

***கொடிறு போல் காய வால் இணர் பாலை (நற்.107:3)***

*பற்றுக்குறடு போன்ற காய்களையுடைய வெள்ளிய பூங்கொத்துகளையுடைய பாலை நிற மலர் என்று நற்றிணை கூறுகின்றது.*

***குல்லை குளவி கூதளம் குவளை (நற்.376:5)***
***வண்டு வாய் திறப்ப விண்ட பிடவம் (நற்.238:3)***
***இலை இல பிடவம் ஈர் மலர் அரும்ப (நற்.242:1)***

*இலைகள் அற்ற பிடவமரங்களில் புதிய மலர்கள் அரும்பிநிற்கும் என்கிறது நற்றிணை.*

***நெய்தல்***

*ஐவகை நிலங்களில் ஒன்றான நெய்தல் நிலத்தின் பெயரால் அமைந்த நெய்தல் மலர் பெண்களின் கண்களுக்கு உவமையாகக் கூறப்படுகிறது.*
*கொடும் கழி நிவந்த நெடும் கால் நெய்தல்*

***அம் பகை நெறி தழை அணி பெற தைஇ (நற்.96:7,8)***
***கண் போல் நெய்தல் போர்வில் பூக்கும் (நற்.8:8)***
***நெய்தல் கூம்ப நிழல் குணக்கு ஒழுக (நற்.187:1)***

*நெய்தல் மலர்கள் கூம்பிப்போக, நிழல்கள் கிழக்குத் திசையில் நீண்டுவிழும் என்கிறது நற்றிணை. மேலும், நெய்தல் மலர் சிறிய இலைகளை உடையது. இதன் இலை யானைக் கன்றின் காதினைப் போன்று இருக்கும் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.*

***சிறு பாசடைய நெய்தல்***
***குறுமோ சென்று என கூறாதோளே (நற்.27:11,12)***
***பெரும் களிறு உழுவை அட்டு என இரும் பிடி***
***உயங்கு பிணி வருத்தமொடு இயங்கல் செல்லாது***
***நெய்தல் பாசடை புரையும் அம் செவி***
***பைதல் அம் குழவி தழீஇ ஒய்யென***
***அரும் புண் உறுநரின் வருந்தி வைகும் (நற்.47:1-6)***

*பெரிய ஆண்யானையைப் புலி கொன்றதாக, அதன் பெரிய பெண்யானையின் உடல் வாட்டமுற்று உள்ளத்தை வருத்தும் பெருந்துயரத்தோடு இயங்க இயலாமல் நெய்தலின் பசிய இலை போன்ற அழகிய செவியையுடைய இளமையான தன் அழகிய கன்றினைத் தழுவிக்கொண்டு, சட்டென ஆற்றுதற்கரிய புண்ணைப் பெற்றவர் போல வருந்தி இருக்கும் என்கிறது நற்றிணை.*

***தளவம் – ஞாழல் – கைதை***

***புதல் இவர் தளவம் பூ கொடி அவிழ (நற்.242:2)***

*புதர்கள் மேல் ஏறிப்படர்கின்ற செம்முல்லைக் கொடியின் பூக்கள் மலர்ந்திருக்கும் என்கிறது நற்றிணைப் பாக்கள். மேலும், சிறிய பூக்களைக் கொண்ட ஞாழலின் தேன் செறிந்திருந்த ஒளிரும் பூங்கொத்துக்களை உடையது என்றும் விளக்கம் கொள்ளப்படுகிறது. இதன் மலர்கள் சிறியதாகவும், நறுமணம் மிக்கதாகவும் இருப்பதாக நற்றிணை கூறுகின்றது.*

***சிறு வீ ஞாழல் தேன் தோய் ஒள் இணர் (நற்.191:1)***
***சிறு வீ ஞாழல் (நற்.31:5)***

***இதுவே நறு வீ ஞாழல் மா மலர் தாஅய் (நற்.96:1)***

*தாள்தாளாக அமைந்த சிறகுகளையும், நீண்ட கால்களையும் உடைய நாரையால் இன்பம் நுகரப்பெற்றுக் கைவிடப்பட்ட துயரத்தையுடைய பேடை கழியின் கரையில் தான் திரியும் பக்கங்களில் சிறிய மீனைப் பிடித்து உண்ணாமல் தாழையின் அழகிய வளைந்த கிளையில் தனிமைத்துயருடன் தங்கியிருக்கும் என்று பொருள் விளக்கம் தருகிறது நற்றிணை.*

***தோடு அமை தூவி தடம் தாள் நாரை***
***நலன் உணப்பட்ட நல்கூர் பேடை***
***கழி பெயர் மருங்கில் சிறு மீன் உண்ணாது***
***கைதை அம் படு சினை புலம்பொடு வதியும் (நற்.178:2-5)***

***ஈங்கை***

*நிறையப் பூக்களைப் பூக்கக்கூடியது ஈங்கை மலர். மணற்பாங்கான இடத்தில் வளரும் தன்மையுடைய மலர். இதன் பூக்கள் குருவின் இளஞ்குஞ்சுக்களைப் போல இருக்கும்.*

***சிறை நாள் ஈங்கை உறை நனி திரள் வீ (நற்.79:1)***
***ஈங்கை முகை வீ அதிரல் மோட்டு மணல் எக்கர்(நற்.124:4,5)***
***நெறி கிளர் ஈங்கை பூவின் அன்ன***
***சிறு பல் பிள்ளையொடு (நற்.181:4,5)***

*உருக்கிய அரக்குப்போன்ற சிவந்த வட்டமாகிய மொட்டுக்களையுடைய ஈங்கையின் பஞ்சு போன்ற தலையை உடைய புதிய மலர் என்பதைப் பின்வரும் வரிகள் எடுத்துக்காட்டுகின்றது.*

***அட்டு அரக்கு உருவின் வட்டு முகை ஈங்கை***
***துய் தலை புது மலர் (நற்.193:1,2)***

*இதன் மொட்டுகள் இரவம் விதையைப் போன்றும், பூக்கள் ஆலங்கட்டியைப் போன்று வெண்மையாகவும் இருக்கும் என்றும், இது குளிர்ச்சியாகவும் புதராகவும் வளரக்கூடியது என்றும் சொல்லப்படுகிறது.*

***கொடு முள் ஈங்கை நெடு மா அம் தளிர் (நற்.205:9)***
***பனி புதல் ஈங்கை அம் குழை (நற்.312:2)***

***கொன்றை***

*பொன்னிறத்தில் பூக்கக்கூடிய மலர் கொன்றை மலராகும். இதன் காய்கள் நீளமாகவும் உள்ளே துறையுடையதாகவும் இருக்கும். இக்காயில் துளையிட்டுப் புல்லாங்குழலாய் இசைப்பதுண்டு என்பதைப் பின்வரும் நற்றிணை வரிகள் எடுத்துரைக்கின்றன.*

***பொன் என கொன்றை மலர (நற்.242:3)***
***புழல் காய் கொன்றை கோடு அணி கொடி இணர் (நற்.296:4)***

***கொன்றை அம் தீம் குழல் மன்று-தோறு இயம்ப (நற்.364:10)***

*அடும்பு*

*ஒள்ளிய பலவாய மலர்களையுடைய கவடுபட்ட இலைகளையுடைய அடும்பினது சிவந்த நிறமுடைய மெல்லிய கொடிகளை நின் தேர்ச்சக்கரம் அறுத்து வந்தது என்கிறது.*

***கொடும் கழி மருங்கின் அடும்பு மலர் கொய்தும் (நற்.349:2)***

***பகன்றை***

*வட்ட வடிவமாக வளருவது பகன்றை மலர் என்றும் பாண்டில் இசைக்கருவி போன்ற வடிவமுடையது என்றும் முன்பனிக்காலத்தில் மலரும் மலர் என்றும் நற்றிணை கூறுகிறது.*

***பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும் (நற்.86:3)***
***பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும்***
***கடும் பனி அற்சிரம் (நற்.86:3,4)***

*பித்திகம் – குருக்கத்தி – ஆரம்*

*மாரிக்காலத்தில் மலரும் பூ என்றும் பித்திகத்தின் இதழ்கள் ஈரத்தன்மையுடன் காணப்படும் என்கிறது.*

***மாரி பித்திகத்து ஈர் இதழ் அலரி (நற்.314:3)***
***துய் தலை இதழ பைம் குருக்கத்தியொடு (நற்.97:6)***

*மேலும், பஞ்சுப் பிசிரினை உச்சியில் கொண்ட இதழ்களை உடைய பைங்குருக்கத்தி மலர் என்று நற்றிணைப் பாக்கள் கூறுகின்றன.*

***ஆரம் நீவிய அணி கிளர் ஆகம் (நற்.344:6)***

*சந்தனக்குழம்பு பூசிய அழகு விளங்கும் மார்பன் என்கிறது நற்றிணை.*

***புன்னை***

***கானல் அம் சிறுகுடி கடல் மேம் பரதவர்***
***நீல் நிற புன்னை கொழு நிழல் அசைஇ (நற்.4:1,2)***

*கடற்கரைச் சோலையிடத்தே அமைந்த அழகான சிறுகுடியில் வாழும் கடல்மேற்செல்லும் பரதவர்கள் நீல நிறப் புன்னையின் கொழுவிய நிழலில் தங்கிச் செல்வர் என்பதிலிருந்து இந்த மரம் நீல நிறத்தை உடையது என்றும், இலைதழைகள் மிகுந்திருப்பதால் மிகுதியான நிழலைத் தரும் என்பதையும் அறியமுடிகிறது.*

***பெரும் போது அவிழ்ந்த கரும் தாள் புன்னை (நற்.231:7)***

*கரும் கோட்டு புன்னை இறைகொண்டனவே (நற்.67:5)*

*இந்த மரத்தின் அடிமரம் மட்டுமில்லாது, இதன் கிளைகளும் நீண்டதாக இருக்கும் என்கிறது நற்றிணை.*

*நெடும் சினை புன்னை கடும் சூல் வெண்குருகு (நற்.31:10)*

*மன்றத்துப் புன்னையின் பெரிய கிளையில் உள்ள நறுமலர்கள் வீட்டு முற்றத்தில் இருக்கும் தாழையோடு சேர்ந்து மணங்கமழும் என்கிறது.*

*மன்ற புன்னை மா சினை நறு வீ*
*முன்றில் தாழையொடு கமழும் (நற்.49:8,9)*

***கல்லென் சேரி புலவர் புன்னை***

*விழவு நாறு விளங்கு இணர் அவிழ்ந்து உடன் கமழும் (நற்.63:3,4)*

*மிகுந்த ஆரவாரமுள்ள சேரியை அடுத்த புலால்நாறும் இடத்திலுள்ள புன்னையின் விழாவுக்குரிய மணம் விளங்கும் பூங்கொத்துகள் உடன் மலர்ந்து மணங்கமழும் என்கிறது. மேலும், இம்மலரிலுள்ள மகரந்தம் பொன் நிறத்தில் இருக்கும் என்றும் நற்றிணை கூறுகின்றது.*

*பொன் நேர் நுண் தாது புன்னை தூஉம் (நற்.78:3)*

*நற்றிணையில் குறிஞ்சிப்பாட்டு கூறும் 99 மலர்களில் ஆம்பல், குவளை, கள்ளி, கருவிளை, குரவம், மருதம், கோங்கம், பாதிரி, அதிரல், குளவி, தில்லை, பாலை, குல்லை, பிடவம், நெய்தல், தளவம், ஞாழல், கைதை, ஈங்கை, கொன்றை, அடும்பு, பகன்றை, பித்திகம், குருக்கத்தி, ஆரம், புன்னை ஆகிய 26 மலர்களின் வருகை முறைகளைக் காணமுடிகின்றது. இதன் வருகை முறைகளைக் கொண்டு தமிழரின் வாழ்வில் மலர்கள் பெறுமிடத்தை அறிமுடிகின்றது. காதல், வீரம், இயற்கை, போர், அழகு, வருணனை, அன்றாட வாழ்வியல்சார் செயல்பாடுகள் போன்ற அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. இவையெல்லாம் தொல்காப்பியர் மொழிந்த ஆறறிவு உயிர்ப்பாகுபாடுகளுள் பகுத்தறிவு உயிராக இல்லாவிடினும் பகுத்தறிவு உடைய மனித வாழ்வில் அவர்களோடு ஒன்றோடு ஒன்று இணைந்து பயணம் செய்வதைச் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் ஊடாக நாம் காணமுடிகின்றது. இந்த ஆய்வானது நற்றிணையிலுள்ள பாக்களின் வழியாக மலர்களின் வருகைகளை எடுத்துரைக்கின்றது. இதுபோன்ற மற்ற சங்க இலக்கியங்களிலும் சங்க இலக்கியத்திற்குப் பிந்தியதான இலக்கியங்களிலும் இதன் வருகையை அறிவதும் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் அவ்வப்போது பதிவு செய்வதும் அவசியமாகும் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.*

**நூற்பட்டியல்**


1. இளம்பூரணர் உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் மூலமும் உரையும், 2010, சென்னை, சாரதா பதிப்பகம்.
2. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
3. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி 3, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
5. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 1, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
6. சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, தொகுதி - 2, 2014, சென்னை, நியூசெஞ்சுரி புத்தக நிலையம்.
7. சுப்ரமணியம்.ச.வே.சு., சங்க இலக்கியம் முழுவதும், 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
8. சிற்பி பாலசுப்பிரமணியன், நீலபத்மநாபன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி, சாகித்திய அகாதெமி.
9. தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம், தொகுதி - 3, 2006, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
10. பேராசிரியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், 2017, சென்னை, அமராவதி பதிப்பகம்.


## References


1. *Elampooranar Urai. 2010, Tholkappiya Porulathikaaram Moolamum Uraium, Chennai, Saratha Publication.*
2. *Sangam Literature, Ettuthogai & Vol I, 2014, Chennai New Century Book House.*
3. *Sangam Literature, Ettuthogai & Vol II, 2014, Chennai New Century Book House.*
4. *Sangam Literature, Ettuthogai & Vol III, 2014, Chennai New Century Book House.*
5. *Sangam Literature Patthupattu & Vol I, 2014, Chennai New Century Book House.*
6. *Sangam Literature Patthupattu & Vol II, 2014, Chennai New Century Book House.*
7. *Subramaniam.Sa.Ve.Su., Sangam Literature, 2006, Chennai, Manivaasagar Publication.*
8. *Sirpi Balasubramaniyan Neelapathmanaban, Puthiya Nokki Tamil Ilakkiya Varalaru, New Delhi, Sakthiya Academy.*
9. *Tamillannal, Tholkappiyam Porullathikaaram, Vol & III, 2006, Chennai, Manivasagar Publications.*
10. *Perachiriyarin Urai, Tholkappiyam Porullathikaaram, 2017, Chennai, Amaravathi Publication.*